**வெலிமட பிரதேச சபை - 2022**

------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வெலிமட பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் வெலிமட பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்ட நிர்மாணங்களின் பெறுமதியை மூலதனமாக்கும் போது ரூபா 550,705 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்யப்படும். | மூலதன செலவினங்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது சபையின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட கெப்பட்டிபொல சந்தை தொகுதியின் வேலைகளை பூர்த்தி செய்வதற்குமுன் ரூபா 18,928,961 தொகை மூலதனமாக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டின் போது சபை நிதியத்தின் மூலம் அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட ரூபா 1,928,206 ஆன 22 வேலைகள் கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காகிதாதிகளின் இறுதி இருப்பு ரூபா 2,190,270 அதிகரித்து கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

**1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுப்பெறுமதி ரூபா 249,275,460 ஆன நிலையான சொத்துக்களில் 03 விடயங்கள் மற்றும் ரூபா 4,596,549 ஆன இறுதி இருப்பு மீதிகள் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காக நிலையான சொத்து பதிவேடு, மதிப்பீட்டு அறிக்கை, கையளித்தல் கட்டளை, உரித்து சான்றிதழ், ஏனைய ஆவணங்கள் மற்றும் பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | எதிர்வரும் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் 19(1) ஆம் பிரிவு | 2007 சனவரி முதல் 2020 ஒக்டோபர் வரையான காலத்தில் ஆட்சேர்க்கப்பட்ட அமைய சுகாதார தொழிலாளர்கள் 26 பேர்களுக்காக உள்ளுராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் மீளாய்வாண்டு வரையும் பெறப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் உள்ளுராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தின் கீழ் அமைய ஊழியர்கள் ஆட்சேர்த்தல் மேற்கொள்ளப்படும். | அங்கீகாரத்தை பெற்று ஊழியர்கள் சேர்க்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவை XXIV ஆம் அத்தியாயத்தின் 1.6 மற்றும் 4 ஆம் பிரிவுகள் | ஓய்வு பெற்றுச் சென்ற, சேவையை விட்டுச் சென்ற மற்றும் மரணமடைந்த 13 உத்தியோகத்தர்களிடம் இருந்து 2005 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 218,358 ஆன நிலுவை கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | உரிய விபரங்களை கண்டறிந்து சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) 1975 இன் 01 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் திருத்த சட்டம். 2(1)(ஈ) பிரிவு | சபையின் 28 உறுப்பினர்களால் 2019 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையும் வருடாந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்ட போதும் இதுவரை சொத்துக்கள், பொறுப்புக்கள் கூற்று வழங்கப்பட்டிருக்க வில்லை. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சொத்தக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று சகல உறுப்பினர்களிடம் இருந்தும் பெறப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 95,113,331 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 48,298,295 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **(i)** | ஆதன வரி | 5,657,070 | 6,037,055 | 1,579,631 | 4,457,424 | 5,814,509 | 6,109,765 | 1,996,443 | 4,113,322 |
| **(ii)** | வாடகை | 43,031,435 | 40,776,566 | 38,538,196 | 2,238,370 | 20,464,530 | 16,814,592 | 14,280,612 | 2,533,980 |
| **(iii)** | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 3,382,659 | 3,748,759 | 3,748,759 | 0 | 2,648,400 | 3,397,666 | 3,397,666 | 0 |
| **(iv)** | ஏனைய வருமானம் | 62,006,073 | 92,611,271 | 39,315,570 | 53,295,701 | 37,619,000 | 59,874,126 | 20,639,554 | 39,234,572 |
| | மொத்தம் | 114,077,237 | 143,173,651 | 83,182,156 | 59,991,495 | 66,546,439 | 86,196,149 | 40,314,275 | 45,881,874 |

**2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) **வீத வரியும் வரியும்** | | |
| (i) மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட ஆதன வரி வருமானமான ரூபா 2,800,000 இல் ஆண்டில் அறவிடப்பட்ட வருமானம் ரூபா 1,718,610 ஆக இருந்ததுடன், அது சிட்டையிடப்பட்ட வருமானத்தில் 61 சதவீதம் ஆகும். | நாட்டில் காணப்பட்ட நெருக்கடியான நிலைமையின் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. | நிலுவையாக உள்ள ஆதன வரியை விரைவாக அறவிடல் வேண்டும். |
| (ii) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட முன்னைய ஆண்டுகளின் நிலுவை ஆதன வரி வருமானம் ரூபா 3,278,292 ஆக இருந்ததுடன், ஆண்டின் போது அதில் ரூபா 578,313 அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிலுவை ஆதன வரி அறவிடல் சதவீதம் 17 சதவீதமான குறைந்த பெறுமதியை கொண்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | **வாடகை**<br>2015 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 127,435 ஆன நிலுவை கடை வாடகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்து நிலுவை பணம் அறவிடப்படும். | நிலுவையாக உள்ள கடை வாடகை அறவிடப்படல் வேண்டும். |
| (இ) | **நீர்க் கட்டணம்**<br>மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்குரிய போகஸ்எல்ல, லந்தேகம மற்றும் தம்பவின்ன – டயரபா நீர் செயற்திட்டங்களில் 09 வருட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற நிலுவை நீர் கட்டணம் ரூபா 296,190 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடமாடும் சேவையினை நடத்தி நிலுவை நீர்க் கட்டணம் அறவிடப்படும். | நிலுவை நீர்க் கட்டணத்தை அறவிடல் வேண்டும். |

**2.3 மிகைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172(3) ஆம் பிரிவின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் விதிக்கப்பட்ட கூட்டுதொகை ரூபா 764,114 ஆன 02 மிகைக் கட்டணங்கள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டின் ஒக்டோபர் முதல் ரூபா 1,000 வீதம் செலுத்தப்பட்டுள்ளது. மிகுதி கட்டணம் அறவிடப்படும் | நிலுவை மிகைக் கட்டணம் அறவிடப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறாதிருந்த 03 தனியார் அறுவைக் கூடங்களுக்காக 14, 14 நாட்களில் புதுப்பிக்கும் வகையில் நாளதுவரையாக்கப்பட்ட வியாபார அனுமதிப் பத்திரிம் வழங்கப்பட்டிருந்தது. | மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கூற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெறப்படவில்லை. எதிர்காலத்தில் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | அறுவைக் கூடத்திற்காக முறையான சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2008 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட்டிருந்த சபைக்குரிய திவிதொட்டவெல இல் அமைந்துள்ள சுடலைக்கூடத்திற்காக கூற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சுடலைக்கூடத்திற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெறப்படல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி சபையில் பதிவுசெய்த ஹோட்டல், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் தங்குமிடங்களில் கடந்த ஆண்டின் வருமானத்தில் 01 சதவீதம் அனுமதிப் பத்திரக் கட்டணமாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | பணத்தை அறவிடுவதற்கு வருமான பரிசோதகருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. | சுற்றடால் சபையளில் பதிவு செய்துள்ள ஹோட்டல் மற்றும் சிற்றுண்டிச்சாலைகளை இனங்கண்டு வரித் தொகை அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 ஆம் திகதிய 1980/46 ஆம் இலக்க கடிதம் மற்றும் வாடகை உடன்படிக்கையின் இலக்கம் 02 நிபந்தனையின் படி 05 வருடங்களுக்கு ஒரு தடவை வாடகை பிரதான விலை மதிப்பீட்டாளரின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டிருக்க வில்லை. | மதிப்பீடு செய்யப்படாத கடைகள் தொடர்பாக புதிய விலை மதிப்பீடொன்றை மேற்கொள்ளுமாறு விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது. | முறையான மதிப்பீடொன்றை மேற்கொண்டு பெறுகை நடவடிக்கைகளின் மூலம் கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது சபைக்குரிய பெக்கோ லோடர் இயந்திரத்திற்கு ரூபா 1,173,565 ஆன 4665 எரிபொருள் லீட்டர் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் போது வருமானம் உழைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படாதிருந்ததுடன், சபையின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்கான மதிப்பீடு, சபை தீர்மானம் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் அறிக்கை என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதுள்ள தகவல்கள் விரைவாக சமர்ப்பிக்கப்படும். | இயந்திர பொறிகளை ஈடுபடுத்தி நடவடிக்கைகளை செய்யும் போது அது தொடர்பாக தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மதிப்பீடு மற்றும் வேலை பூர்த்தி செய்யப்பட்டமைக்கான அறிக்கை பேணிச் செல்லல் வேண்டும். |